CANADIAN TAMIL CONGRESS ▪ CONGRÈS TAMOUL CANADIEN
31 Progress Avenue, Suite #202, Scarborough M1P 4S6 T: 416-240-0078 F:416-240-1601 e-mail:info@ctconline.ca

ரொறன்ரோ, 2007 நவம்பர் 2

தமிழின சமாதான மறவர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இலங்கை அரசினால் திட்டமிட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வெளியுலகத்தால் நன்கு மதிக்கப்படும் சமாதானப் பேச்சுவார்த்தையாளராய் விளங்கிய, தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைத் தலைவர் திரு. தமிழ்ச்செல்வன் வெள்ளிக்கிழமை காலை இலங்கை வான் படையினால் கொல்லப்பட்டுள்ளார்.

கனடிய தமிழர் பேரவை இச்செய்தி கேட்டு இதயம் தகர்ந்து, உள்ளம் வெந்து, மீளாத் துயருள் ஆழ்ந்துள்ளது. 1994 முதல் சிறிலங்கா அரசுடன் இடம்பெற்ற பல்வேறு பேச்சுவார்த்தைகளில் அமரர் தமிழ்ச்செல்வன் தலைமைப் பேச்சுவார்த்தையாளராய் கலந்துகொண்டார். தமிழ் மக்களின் மனக்குறைகளை அப்பேச்சுவார்த்தைகளில் அவர் மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் முன்வைத்தார். அதன் மூலம் அவற்றுக்குத் தீர்வுகாண்பதற்கு அவர் மனவுறுதியும் திடசித்தமும் கொண்டிருந்தார். உலகப் பெருந் தலைவர்கள், சாணக்கியர்கள், ஊடகத் துறைஞர்கள் பலரும் அவரை ஒழுங்காகச் சந்தித்து வந்தார்கள். இலங்கை உள்நாட்டுப் போருக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சியில் ஈடுபடும் நோக்குடன் கனடிய அரசியல் கட்சிகள் அனைத்தின் பிரதிநிதிகளையும், கூட்டாட்சி அரங்கின் (Forum of Federation) உறுப்பினர்களையும் அவர் சந்தித்து உரையாடினார்.

“பாப் றே (Bob Rae) டேவிட் கமெறன் (David Cameron) போன்ற பெயர்போன கனடியப் புத்திமான்களை அமரர் தமிழ்ச்செல்வன் சந்தித்து, இலங்கை அரசியல் பிரச்சனைக்கு அமைதி வழியில் தீர்வு காண்பது குறித்து ஆராய்ந்தார். அத்தகைய ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையாளருக்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு இலக்கு வைத்தமை, சமாதான வழியிலோ பேச்சுவார்த்தை முறையிலோ அதற்கு நாட்டம் இல்லை என்பதையே தெளிவாகப் புலப்படுத்துகிறது” என்று கனடிய தமிழர் பேரவையின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை எடுத்துரைத்தார்.

CANADIAN TAMIL CONGRESS ■ CONGRÈS TAMOUL CANADIEN
31 Progress Avenue, Suite #202, Scarborough M1P 4S6 T: 416-240-0078 F:416-240-1601 e-mail:info@ctconline.ca

அமரர் தமிழ்ச்செல்வன் பல நாடுகளுக்குச் சென்று, இலங்கை அரசின் அடக்குமுறை ஆட்சியில் தமிழ் மக்கள் படும் அல்லல்களை வெளிப்படுத்தினார். இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வெளியுலகம் அறிய வெளிக்கொணர்வதற்கு அவர் அயராது பாடுபட்டார்.

தமிழ்ச்செல்வன் அவர்களினதும், மற்றும் ஐந்து சக போராளிகளினதும் மறைவு குறித்து அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் கனடிய தமிழர் பேரவை அதன் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறது. இலங்கை அரசின் இத்திடட்மிட்ட கொடூர நடவடிக்கை, சமாதானப் பேச்சுவார்த்தைக்கான கதவை அடித்துச் சார்த்தியுள்ளது என்றே நாம் கருதுகிறோம். தமிழ் மக்களின் விறல் படைத்த அரசியல் தலைவர் ஒருவரின் உயிரைக் குடித்ததன் மூலம் இலங்கை அரசு தனக்குச் சமாதான நாட்டம் இல்லை என்பதையே நிலைநாட்டியுள்ளது.

தமிழ் மக்களின் தலைமைப் பேச்சுவார்த்தையாளரைக் கொன்ற இலங்கை அரசின் அருவருப்பான, வலிந்த தாக்குதலைக் கனடிய தமிழர் பேரவை வன்மையாகக் கண்டிக்கிறது. இலங்கை அரசின் இந்தச் செயலைக் கண்டிக்கும்படியும், தமிழ் மக்களுக்கு எதிரான அதன் வலிந்த படைபலத் தாக்குதலைக் கைவிடுமாறு அதனை நிர்ப்பந்திக்கும்படியும் கனடிய அரசாங்கத்தையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கனடிய தமிழர் பேரவை கேட்டுக்கொள்கிறது. இலங்கை அரசு மனித உரிமைகளை மதித்து, சமாதான அரசியல் தீர்வு நாடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு அதற்கு நிர்ப்பந்தம் கொடுக்கும்படி நாம் கனடிய அரசாங்கத்தை வேண்டிக் கொள்கிறோம்.

• Toronto (416) 240-0078 • Ottawa (613) 789-9371 • Montreal (514) 898-8019 • Vancouver (778) 231-0074